7

# ஊமைராணி மந்தாகினி

**முனைவர் சி அருள் செல்வம்**
**தமிழ்த்துறைத் தலைவர்(சுழற்சி2)**
**ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி மகளிர் கலை**
**மற்றும் அறிவியல் கல்லூரி,** சென்னை **600 001**

தமிழ் இலக்கியம் என்பது பாரம்பரிய மிக்க வரலாற்றை உடையது. அதன் வளர்ச்சியும் நீட்சியும் பல்வேறு பரிமாணங்களின் வெளிப்பாடு என்று சொல்லலாம். இலக்கியம், அதில் வெளிப்படும் கற்பனை, உவமை, உள்ளுறை என்ற பல்வேறு உத்தி முறைகளுக்கு அப்பாற்பட்ட எதார்த்த மொழியின் சங்கமம் என்று சொல்லலாம். ஆனால் இலக்கியம் அல்லது படைப்பு என்பது முன்னேற்பாடு இல்லாத ஒன்று அல்ல என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. எந்த ஒரு படைப்பும் இறந்த காலத்தின் நிகழ்கால தொடர்ச்சியே என்பது உண்மை. பொன்னியின்செல்வன் என்பதே ஒரு இறந்த காலத்தின் நிகழ்கால தொடர்ச்சியாக நீண்டுள்ளது என்பதோடு அது எதிர்காலத்தின் புரட்சி என்ற அளவிற்கு சொற்பொருள் செறிவும், கருத்தாழமும் உடையது.

தோன்றியது முதலே இந்த உலகம் பெண்வழிச் சமூகமாகவே இயங்கி வந்தது. இன்றும் பெண்வழிச் சமூகமாகவே இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஒரு பெண் இல்லை என்றால் அங்கே உருவாக்கம் இல்லை, இயக்கம் இல்லை, முடிவும் இல்லை. இவ்வாறு தொடக்கம், தொடர்ச்சி, முடிவு என்று எல்லாம் ஆகி இருப்பவளே ஆதி சக்தி அவள் பெண்ணாவாள். இது ஒவ்வொரு பெண்ணிற்குள்ளும் உண்டு.

உலகத்தில் எந்த இலக்கியங்களின் வரிசைகளை எடுத்துக் கொண்டாலும் சரி, அல்லது காப்பியங்களின் வரிசையில் எடுத்துக் கொண்டாலும் சரி, ஒரு பெண் என்பவள் எத்தகைய ஆளுமையோடு இருக்கிறாள் என்பதை காட்டுவதாகத்தான் இலக்கியங்கள் படைக்கப் பட்டிருக்கும். அப்படிப் படைக்கப்பட்ட(இராமாயணத்தில் சீதை, மகாபாரதத்தில் பாஞ்சாலி) இலக்கியங்கள் தான் காலத்தை வென்று பேசப்பட்டிருக்கும். இவ்வாறு, ஒவ்வொரு மொழிகளிலும் உள்ள இலக்கியங்களை நாம் கண்ணோக்கிப் பார்க்கும் பொழுது, ஒரு பெண் என்பவள் எத்தகையச் சிறப்பு பெற்றவள் என்பதை நமக்கு உணர்த்துவதாகப் படைக்கப் பட்டிருக்கின்றது என்பதே கண்கூடு.

அவ்வாறே, எந்த ஒரு இலக்கியமாக அல்லது காப்பியமாக இருந்தாலும் எதிரியின் பலத்தைக் கொண்டு தான் அந்தக் கதைத் தலைவனின் வீரம் போற்றப்படும். பொன்னியின் செல்வன் என்பது சோழதேசத்தின் கதையாக இருக்கின்றது. இது ஒரு வரலாற்று நாவல். இதில் சோழர்குல வரலாறு பேசப்படுகின்றது. சோழர் குலத்தின் வீரத்தை பறைசாற்றும் விதமாக இந்த கதை அமைக்கப்பட்டுள்ளது. சோழர் குலத்தின் வீரத்தோடு ஒப்பிடும் பொழுது அவர்களுக்கு, அவர்களுடைய வீரத்திற்கு ஈடான அல்லது மேலான பகை என்பது இருந்திருக்கவில்லை. ஆகவே, பொன்னியின் செல்வன் கதையில் எதிரி ஒருவர் வேண்டியிருக்கிறது. அதுவும் ஒரு சிறப்பான பெண் எதிரி தேவைப்படுகின்றாள். அப்படி பலமுள்ள ஒரு சிறந்த பெண் எதிரியை உருவாக்க வேண்டும் என்று கல்கி அவர்கள் பலவாறு சிந்தித்து இருக்கின்றார். அதன் விளைவாக வெளிப்பட்டதுதான்

அந்தக் கதாபாத்திரம் ஆகும். அது கல்கி அவர்கள் சிந்தித்துச் சிந்தித்து செதுக்கிய உருவம்தான், அதுவும் கற்பனை உருவம்தான். அதற்கு மந்தாகினி என்று பெயர்.

பெண்ணின் அடையாளங்கள் எப்பொழுதும் அமைதியானவள், மென்மையானவள், சாதுவானவள் என்பவை தானே. பெண் என்பவள் வாய் பேசத்தெரிந்தும் அமைதியாக, காது கேட்டும் கேட்காதவளுமாக இருக்க வேண்டியவள் தானே. அதனால்தான் கல்கி அவர்கள் உருவாக்கிய அந்தப் பெண் மந்தாகினியும் காது கேட்காதவளாகவும், வாய் பேசத்தெரியாத ஊமையாகவும் படைக்கப்படுகின்றாள். பொன்னியின் செல்வனில் வரும் கதைமாந்தர் சுந்தரச்சோழர், மலையமான்குமாரி, குந்தவைநாச்சியார், ஆதித்தகரிகாலன், அருள்மொழிவர்மன், இளையராணி நந்தினிதேவி மற்றும் ஊமைராணி மந்தாகினி எனப்பலர் இருந்தாலும், அதில் வரும் ஊமைராணி மந்தாகினி கதாபாத்திரம் கற்பனை கலந்த பெண் எனும் குறியீட்டு நிலை சார்ந்த கதாபாத்திரம் என்றே கொள்ள வேண்டும்.

**மந்தாகினியின் வேறு பெயர்கள்**

மந்தாகினி, ஊமைப் பெண், ஊமைராணி, ஈழத்து ராணி, ஊமச்சி ஆவி, சுந்தரச் சோழரின் காதலி, பொன்னியின் செல்வனைக் காக்கின்ற தெய்வம், ஈழத்து அரசி, சோழர் குலதெய்வம், காவிரி அம்மன், வலைஞர் குல மகள் என்பன மந்தாகினியின் வேறு பெயர்களாகும்.

**மந்தாகினியின் உறவினர்கள்**

கல்கி அவர்களால் எழுதப்பட்ட பொன்னியின் செல்வன் என்ற நாவலில் வருகின்ற முக்கியத் திருப்பங்களுக்குக் காரணமாக அமைகின்ற கதாபாத்திரம் வாய்பேசத்தெரியாத, காது கேட்காதவளாக இருக்கின்ற அந்த ஊமைப் பெண் மந்தாகினி ஆவார். இவருடைய உறவினர்கள் என்று கூறும்பொழுது மந்தாகினியின் உடன் பிறந்தவர்கள் வாணி அம்மையும், தியாகவிடங்கரும் ஆவார்கள். வாணி அம்மைக்குத் திருமணம் ஆகவில்லை. தியாகவிடங்கருக்கு திருமணம் ஆகி இரண்டு பிள்ளைகள். ஒருவர் சமுத்திரகுமாரி பூங்குழலியாவர். மற்றொருவர் அவருடைய மகன் முருகையன். மந்தாகினியின் குழந்தைககள், நந்தினி மதுராந்தகர். இவ்வாறாகப் பலரும் மந்தாகினியின் உறவினர்களாக பொன்னியின் செல்வன் கதையில் இடம்பெற்றுள்ளனர்.

**மந்தாகினி**

மந்தாகினி கல்கி எழுதிய பொன்னியின் செல்வன் புதினத்தில் வரும் கற்பனைக் கதாப்பாத்திரமாகும். புதினத்தின் ஆசிரியர் கல்கி மந்தாகினியை செவிட்டுப் பெண்ணாகவும், ஊமைப் பெண்ணாகவும் அறிமுகம் செய்கிறார். இலங்கைத் தீவில் கடற்கரை ஓரத்தில் மீன்பிடித்துப் பிழைக்கும் கரையர் என்னும் குலத்தில் பிறந்தவள் மந்தாகினி. அவள் காது கேளாத வாய் பேசத்தெரியாத ஊமையாவாள். இதை, பெரிய அத்தையின் பெயரில் தாத்தாவுக்கு ரொம்ப ஆசையாம். குழந்தை பிறந்தவுடன் இராணியாகும் யோகம் இருக்கிறது என்று யாரோ ஜோசியன் ஒருவன் சொன்னானாம். அதனால் குழந்தை ஊமை என்று தெரிந்ததும் அவருடைய மனவேதனை ரொம்ப அதிகமாயிருந்ததாம். பொன்.செல்.**பக்.1146** என்று பூங்குழலி கூறுவதாலும் அறியலாம். மந்தாகினி காட்டில் வாழும் பெண்ணாவாள். உலகத்து நாகரிக வாழ்க்கையை அறியாதவள் என்பதை அவளுடைய தோற்றத்தாலும் உடையாலுமே அறிந்து கொள்ளலாம். குறிப்பாக, மந்தாகினி சுந்தரச் சோழரின்

காதலியாக, சோழரின் குடும்பத்தின் மீதான பாசத்தினை வெளிக்காட்டும் அபலைப் பெண்ணாகவே இறுதிவரை வாழ்ந்து மடிகிறாா்.

**மந்தாகினியின் சகோதரி வாணி அம்மை**

பூதத் தீவிலே வாழ்ந்து வரும் கரையர் என்பவருக்கு பிறந்த பெண்குழந்தைகளில் ஒருவர் மந்தாகினி மற்றொருவர் வாணியம்மை ஆவார். அதாவது, மந்தாகினியின் தங்கை வாணி அம்மையாவர். இவரும் காது கேளாத வாய் பேசத்தெரியாத ஊமையாவர். அமுதனுடைய தாயாரை பார்த்ததும் அந்த மூதாட்டி பேசும் சக்தி அற்ற ஊமை காதும் கேளாது என்று தெரிந்தது. ஆனால் அந்த மாதரசியின் முகத்தில் கருணையும் அன்பும் நிறைந்து... ஒரு அங்கத்தில் ஊனமுற்றவர்கள் மற்றபடி சிறந்த அறிவுக்கூர்மை உள்ளவர்களாக விளங்குவது சிருஷ்டி விசித்திரங்களில் ஒன்று அல்லவா! பொன்.செல்.பக்.162. என்று கூறுவதால் அறியலாம். மேலும், வாணி அம்மை சேந்தன் அமுதனின் வளர்ப்புத்தாயாவர் என்பதை, பார்த்தாயா மதுராந்தகா! என் வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த மகன், அதோ குடிசையில் வாழும் சேந்தன் அமுதன். அவனுக்கு ஐந்து வயதான போதே எனக்கு இச்செய்தி தெரிந்து விட்டது. அவன் எட்டு நாள் குழந்தையாய் இருந்தபோது மூச்சுப் பேச்சற்று கிடந்ததைப் பார்த்து இறந்து விட்டதாக எண்ணினேன். பிள்ளை பாசத்தினால் உன்னை என் குழந்தையாக ஏற்றுக் கொண்டு இவனைக் கொண்டு போய் புதைத்து விடச் சொன்னேன். இவனை எடுத்துப் போன வாணி வெகு காலம் திரும்பி வரவே இல்லை. ஐந்து ஆண்டு கழித்த பிறகு இவளையும் பிள்ளையையும் பார்த்ததும் உண்மை தெரிந்து கொண்டேன் பொன்.செல்.பக்.1722 என்று பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி கூறுவதாலும் அறிந்து கொள்ளலாம்.

**மந்தாகினியின் சகோதரன் தியாகவிடங்கர்**

மந்தாகினியின் சகோதரன் தியாகவிடங்கர் ஆவார். தியாகவிடங்களுக்கு மகன் முருகையனும், மகள் பூங்குழலியும், மகனுடைய மனைவி ராக்கம்மாளும் உண்டு. தியாகவிடங்கர் கோடிக்கரைக்கு அருகே உள்ள கலங்கரை விளக்கத்தின் காவலனாக வேலை பார்த்து வருகிறார். அங்கே, கலங்கரை விளக்கின் காவலன் அவளுடைய சகோதரர் என்று தெரிந்தது பொன்.செல்.**பக்**.1705 என்று கருதிருமன் கூறுவதால் அறிய முடிகின்றது.

**மந்தாகினியின் குழந்தைககள்**

மந்தாகினி பூதத்தீவில் வாழ்ந்து வருகின்றாள். அங்கே ஒரு வாலிப வீரன் கரைசேர்கின்றான். அவனை கரடியிடமிருந்து காப்பாற்றிய போது அவனது காதல் மந்தாகினிக்குக் கிட்டியது. சிறிது காலம் கூடி விளையாடித் திரிந்த அவர்களை பிரிக்கும்படி மரக்கலம் ஒன்று வந்து, அந்த வாலிபனை அழைத்துச் சென்றது. வாலிபனை பிரிய மனம் இல்லாத மந்தாகினி அவனை தேடி கோடியங்கரைக்கு வருகின்றாள். அங்கே தான் விரும்பிய அந்த வாலிபன் அரண்மனை மேல் மாடத்தில் தலையில் கிரீடம் சூட்டி நிற்பதையும், அவனை சூழ்ந்து ஆடை அலங்காரங்கள் புனைந்த பலர் நிற்பதையும் பார்த்து அந்த இளம் பெண்ணின் மனம் கலங்கியது. அவள் ஒரே ஓட்டமாக ஓடி கடற்கரையை அடைந்து கலங்கரை விளக்கத்தின் மேலேறி கீழே குதித்தாள். கலங்கரை விளக்கத்தின் மீதி இருந்து குதித்ததால் தன் தந்தையையும் யார் என்று அறிய முடியாதபடி புத்தி சுவாதீனம் அடைகின்றாள். அவளைக் கருத்திருமன் என்பவன் காப்பாற்றி மீண்டும் பூதத்தீவில் கொண்டு வந்து சேர்க்கின்றான். அவளுடன்

கூடவே கடலில் கட்டையைப் பிடித்து தத்தளித்த வீரபாண்டியனையும் அங்கேயே கரை சேர்க்கின்றான். சிறிது காலம் சென்று மீண்டும் மந்தாகினி கால் தவறி கடலில் விழுந்து காப்பாற்றப்பட்டாள். அதனால், தற்சமயம் நடந்தவைகளை மறந்த மந்தாகினி சுயநினைவு அடைகின்றாள். அப்பொழுது அவள் தான் கருவுற்று இருப்பதை அறிந்து அதிர்ச்சி கொள்கின்றாள். அவளுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. இதனை, அவளுக்கு சகோதரன் சகோதரி யாரையும் நினைவிருக்கவில்லை. மறுபடியும் ஒரு தடவை கால் தவறி கடலில் விழுந்து காப்பாற்றப்பட்ட பிறகு அவர்களை எல்லாம் அவளுக்கு நினைவு வந்தது. அவள் கர்ப்பவதியாய் இருக்கிறாள் என்பதை மற்றவர்கள் தெரிந்து கொண்டார்கள். அதை அவளும் உணர்ந்து பெரும் பீதியில் ஆழ்ந்தாள். கோடிக்கரைக் கோவிலுக்கு அடிக்கடி சென்று அங்கே கைங்கரியம் செய்து கொண்டிருந்தாள். பொன்.செல்.பக்.1705,1706 என்பதாலும், அந்த கரையர் மகள் பெரிய பிராட்டியின் அரண்மனை தோட்டத்தில் வந்து சில நாள் தங்கி இருந்ததாகவும், இரட்டைக் குழந்தைகள் பெற்று அங்கேயே போட்டுவிட்டு ஓடிப்போனதாகவும் கூறினார். எப்போதாவது நினைத்துக் கொண்டு குழந்தைகளை பார்ப்பதற்காக அவள் ரகசியமாக வருவதுண்டு என்றும் தெரிவித்தார் பொன்.செல்.**பக்.**1192 என்பதாலும் மந்தாகினிக்கு இரட்டைக் குழந்தைககள் உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம்.

**நந்தினி**

மந்தாகினி பெற்றெடுத்த இரட்டைக் குழந்தைகளுள் ஒன்று பெண் குழந்தை. இந்தப் பெண் குழந்தையை ஆழ்வார்கடியான் என்பவன், நந்தவனத்தில் கிடைத்ததாக கூறி நந்தினி என்று செல்லமாகப் பெயரிட்டுத் தன் சகோதரியாகவே எடுத்து வளர்த்து வருகின்றான்.

**நந்தினியின் தாய்**

நந்தினி தான் பிறந்தபோதே தன் பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில், ஆழ்வார்கடியானால் எடுத்து வளர்த்துவரப்பட்டவள். இருந்தபோதிலும், நந்தினி தன் தாய் யார் என்பதை அறிந்து கொண்டதாகக் கூறுகிறாள். இதனை, அவள் என் அன்னை என்று அறிவேன். இது மற்றும் பலருக்கும் தெரிந்திருந்தது. ஏனெனில், அந்த பெண்ணரசிக்கும் எனக்கும் உருவத்தோற்றத்தில் அமைந்திருந்த ஒற்றுமை பலரும் காணக்கூடியதாய் இருந்தது. பொன்.செல்.பக்.1576 என்றும், குழந்தை பிராயத்தில் நான் படுத்து தூங்கும் போது சில சமயம் திடுக்கிட்டு கண்விழித்துக் கொள்வேன். அப்போது ஒரு பெண்ணுருவம் என் முகத்தின் அருகில் குனிந்து என்னைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கக் காண்பேன். நான் கண்விழித்ததும் அந்த உருவம் மறைந்து விடும். இது எனக்கு அதிசயத்தையும், அச்சத்தையும் அழித்து வந்தது. கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்துக் கொள்வதில் எனக்கு அப்போதிலிருந்து ஆசை நிரம்ப உண்டு. ஆகையால் என் முகத்தோற்றம் என் மனதில் நன்றாகப் பதிந்திருந்தது. நான் தூங்கும் போது என்னை குனிந்து உற்றுப் பார்த்த உருவம் என்னைப் போலவே இருப்பது பற்றி வியந்திருக்கிறேன். என் முகமும் ஒரே மாதிரி இருக்கும் கூடுவிட்டு கூடு பாய்வது பற்றி கதைகளை நான் கேட்டிருந்தேன். என் உயிரே என் உடம்பை விட்டு பிரிந்து தனியாக மேலே நின்று என் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறதோ என்று சந்தேகப்படுவேன். சில சமயம் நான் இறந்து போய்விட்டேனோ? படுத்து இருப்பது என் உயிர் அற்ற உடம்பு தானோ? என்று திடுக்கிடுவேன். இதெல்லாம் உண்மையாக நடப்பதா? கனவில் நடப்பதா? அல்லது என்

மனப்பிரம்மையா எனக்கு சித்தக் கோளாறு ஏற்பட்டு விட்டதா? என்றெல்லாம் எண்ணி வேதனைப்படுவேன். எனக்கு பிராயம் வந்த பிறகு அப்படி நான் கண்டதெல்லாம் உண்மையான தோற்றமேதான் என்று பல காரணங்களால் எனக்கு நிச்சயம் ஆயிற்று. முக்கியமாக, சுந்தரச் சோழர் என்னை பார்த்து அடைந்த குழப்பத்தைக் கவனித்து அந்த நிச்சயம் அடைந்தேன். வேறு பல அறிகுறிகளாலும், ஆழ்வார்க்கடியான் சில சமயம் தவறிக் கூறிய வார்த்தைகளாலும் என்னைப் போன்ற உருவம் படைத்த என் அன்னை ஒருத்தி இருக்க வேண்டும் என்று நிச்சயம் அடைந்தேன். அத்.37 இரும்பு நெஞ்சு இளகியது, பொன்.செல்.பக்.1559 என்று கூறுவதாலும் அறியலாம்.

நந்தினியின் தந்தை

நந்தினியின் தந்தை யார்? என்பதை வெளிப்படையாக நாவலாசிரியர் குறிப்பிடவில்லை என்றாலும் குறிப்பாகச் சில இடங்களில் உணர்த்திச் சென்றுள்ளதைக் காண முடிகின்றது. இதை, நான் உயிர் வாழ்ந்திருப்பது வீரபாண்டிய சக்கரவர்த்தியின் கொடூர கொலைக்கு பழி வாங்குவதற்காகத்தான்... என்றாள் நந்தினி. பக்.951 என்று கூறுவதாலும், ஆதித்த கரிகாலனை மிக நெருங்கி அவர் காதிலே மிக மெல்லிய நடுங்கிய குரலில் என்னைப் பெற்ற தந்தை...தான் என்று கூறினாள். கூறிவிட்டு விம்மி விம்மி அழ தொடங்கினாள். ஆதித்த கரிகாலன்... மறுகணமே... அவனுடைய ஆவேசம் அடங்கியது வேதனை மிகுந்த குரலில் ஆம் நந்தினி நீ கூறியது உன் உண்மையாகவே இருக்க வேண்டும்... அன்றைக்கு நீ என்னுடைய காலில் விழுந்து மன்றாடிய போது நான் உன் வேண்டுகோளை மறுத்தது எவ்வளவு பெரிய கொடுமை என்று தெரிகிறது. நந்தினி உலகில் வேறு எத்தனையோ தீங்குகளுக்கு பிராயச்சித்தம் உண்டு. ஆனால், நான் செய்ததற்கு பிராயச்சித்தம் கிடையாது. நம் இருவருக்கும் நடுவில் உள்ள தடை நீங்க வழியே கிடையாது. ஐயோ இந்த பெரும் பாதகத்தை இத்தனை நாள் எப்படி உன் மனதில் வைத்துத் தாங்கிக் கொண்டிருந்தாய். நம் இருவருடைய வாழ்க்கைக்கும் பரிகாரம் ஒன்று தான்... இதோ நந்தினி என் பிராயச்சித்தம் பொன்.செல்.பக்.1577 என்று கூறுவதாலும் உணரலாம்.

**நந்தினியின் சகோதரன்**

நந்தினியின் சகோதரராக ஆழ்வார்க்கடியான், ஆதித்த கரிகாலன், மதுராந்தகன் என மூவரை நாவல் முழுவதிலும் காணலாம். இவர்களில் உண்மையில் நந்தினியின் சகோதரன் யார்? என்பதை நம்மால் காண முடிகின்றது.

**1.ஆழ்வார்கடியான்**

மந்தாகினி பெற்றெடுத்த குழந்தைகளில் பெண் குழந்தை நந்தவனத்தில் கிடைத்ததாகக் கூறி, நந்தினி என்று செல்லமாகப் பெயரிட்டு அழைத்துத் தன் சகோதரியாகவே எடுத்து வளர்த்து வருகின்றான் ஆழ்வார்க்கடியான். பச்சைக்கிளியும், கடுவன் குரங்கும் ஒரு தாயின் குழந்தைகள் என்றால் எளிதில் நம்ப முடியுமா? நந்தினி சிரித்துவிட்டு, ஒரு விதத்தில் அவர் சொன்னது உண்மைதான். நாங்கள் ஒரே வீட்டில் ஒரே குடும்பத்தில் வளர்ந்தோம். உடன்பிறந்த தங்கையைப் போலவே என்னிடம் பிரியம் வைத்திருந்தார். பாவம் அவருக்குப் பெரும் ஏமாற்றம் அளித்து விட்டேன் பொன்.செல்.பக்.1555. என்று நந்தினி கூறும் பொழுது இவர் உண்மையில் நந்தினியின் சகோதரன் இல்லை என்பதை அறியலாம்.

**2.ஆதித்த கரிகாலன்**

நந்தினியை நீ என் தந்தையின் மகள். ஆகையால் என் சகோதரி. சக்கரவர்த்தி என் அன்னையை மணப்பதற்கு முன்னால் ஈழ நாட்டைச் சேர்ந்த ஒரு தீவிலே ஒரு மாதரசியை காதலித்துக் கந்தர்வ மனம் புரிந்து கொண்டார். அவளுடைய புதல்வி நீ. ஆகையால் என் சகோதரி என்றும், சிறுபிராயத்தில் உன்னையும், என்னையும் பிரித்து வைப்பதற்குப் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி செய்த முயற்சிகள் எனக்கு புரியாமல் இருந்தன. ஆனால், உண்மையை அவர்கள் அப்பொழுது சொல்லி இருக்கலாம். போனது போகட்டும். சென்றதெல்லாம் நாம் இருவரும் மறந்து விடுவோம். மறக்க முடியாவிட்டாலும், மன்னித்து விடுவோம் என்றும் கரிகாலன் கூறுகின்றான். அப்பொழுது ஆதித்த கரிகாலனை மிக நெருங்கி, அவர் காதிலே மிக மெல்லிய நடுங்கிய குரலில், என்னைப் பெற்ற தந்தை...தான் என்று கூறினாள்... ஆம் நந்தினி! ஆம் நீ கூறியது உண்மையாகவே இருக்க வேண்டும். இப்போது எல்லாம் எனக்குத் தெரிகிறது. அன்றைக்கு நீ என்னுடைய காலில் விழுந்து மன்றாடிய போது நான் உன் வேண்டுகோளை மறுத்தது எவ்வளவு பெரிய கொடுமை என்று தெரிகிறது. பொன்.செல்.பக்.1576,1577என்று கூறும் பொழுது, ஆதித்த கரிகாலன் உண்மையில் நந்தினியின் சகோதரன் இல்லை என்பதை அறியலாம்.

**மதுராந்தகன்**

நந்தினியின் சகோதரராக ஆழ்வார்கடியான், ஆதித்த கரிகாலன் என இருவரை நாவல் முழுவதிலும் கண்ட போதிலும், உண்மையில் யார்? நந்தினியின் சகோதரன் என்பதை கூறும் பொழுது, நந்தினியின் சகோதரன் மதுராந்தகன்தான் என்பதை, தீவர்த்தி வெளிச்சத்தில் அவர்கள் முகங்கள் புலப்பட்டதும் வந்தியத்தேவனுடைய பீதி அடியோடு அகன்றது. பீதியை காட்டிலும் பன்மடங்கு அதிகமாக வியப்பு உண்டாகியது. அவர்களின் நடுவிலே வந்த உருவம் முதலில் ஒரு அதிசயமான பிரமையை வந்தியத்தேவனுக்கு உண்டாக்கிற்று. இளையராணியாகிய நந்தினி தான் வருகிறாள் என்று தோன்றியது. மறுகணத்திலேயே அந்த பிரம்மை நீங்கியது. வருகிறவன் ஆண் மகன் என்று தெரிந்தது. கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் அரைகுறையாகத் தான்பார்த்த இளவரசர் மதுராந்தகத் தேவர் என்பதை அறிந்து கொண்டான். என்று கூறும் பொழுது நம்மால் காண முடிகின்றது.

**பொன்னியின் செல்வனின் தாய் மந்தாகினி**

மந்தாகினி பொன்னியின் செல்வனை தன் புதல்வனாகக் கருதுகிறார். பொன்னியின் செல்வர் மீது அவளுடைய பார்வை தங்க நின்றது... மந்தாகினி இளவரசரை தன் கையினால் தொட்டுக்கொண்டு சக்கரவர்த்தியின் திருமுகத்தை பார்த்தாள். இவன்தான் என் புதல்வன் என்னும் பொருள் அந்தப் பார்வையில் இருந்து மிகத் தெளிவாக வெளியாயிற்று. பொன்.செல்.பக்.1505 என்பதனால் அறிகிறோம்.

**பொன்னியின் செல்வனைக் காக்கும் கடவுளாக மந்தாகினி**

சிறுபிராயத்தில் அருள்மொழிவர்மன், குந்தவை, ஆதித்த கரிகாலன், இவர்களது தந்தை சுந்தர சோழர் மற்றும் தாய் மலையமான் குமாரி ஆகியோர் காவிரி நதியில் பயணப்பட்டுக் கொண்டிருக்கையில் அருள்மொழிவர்மன் படகிலிருந்து தவறி விழுந்துவிடுகிறார். அவரைக் காப்பாற்றி மீண்டும் படகில் சேர்த்தவர் யார் என யாருக்குமே அறிந்திருக்கவில்லை. மற்றவர்கள்

இளவரசரைக் காப்பாற்றியது பொன்னி நதிதான் என்று முடிவுக்கு வருகிறார்கள். அன்றைய தினத்திலிருந்து இளவரசரைப் பொன்னியின் செல்வன் என்றே அழைக்கின்றார்கள். சுந்தரச் சோழருக்கு மட்டும் அந்த பெண்ணின் திருவுருவம் கண்களிலேயே இருக்கிறது. இதை காவேரி நதியில் நாம் எல்லோருமாக ஓடத்தில் போய்க் கொண்டிருந்த போது குழந்தை அருள்மொழி வர்மன் திடீரென்று காணாமல் போனது உனக்கு நினைவிருக்கிறது அல்லவா… நீங்கள் எல்லோரும் காவிரி அம்மன் தான் குழந்தையை காப்பாற்றியதாக முடிவு கட்டினீர்கள். ஆனால், என் கண்ணுக்கு என்ன தோன்றியது தெரியுமா? அந்த வலைஞர் குல மகள் ஊமச்சி ஆவி என்று. எனக்குத் தோன்றிய படிய தான்… பொன்.செல்.**பக்**.475 என்ற சுந்தரச் சோழரின் கூற்றினாலும் அறிகிறோம்.

பொன்னியின் செல்வருக்குத் தன்னைக் காப்பற்றியது பொன்னி நதியல்ல என்ற எண்ணம் வலுப் பெறுகிறது. அவ்வாறு தன்னைக் காத்த மங்கையை, அவள் ஊமைப் பெண் எனவும், அவளுக்குத் தன் பெயரில் இருக்கும் பாசத்தினைக் கண்டும் திகைக்கின்றார்.

ஒருமுறை, ஈழத்தில் பொன்னியின் செல்வனைச் சந்தித்த மந்தாகினி, இளவரசரை விரைவில் அவர் தங்கியிருந்த இடத்திலிருந்து வெளியேறச் சொல்கிறார். குளிர்க் காய்ச்சல் வீரர்களையும், இளவரசரையும் தாக்கலாம் என்றும் கூறுகிறாள். இளவரசர் காலதாமதம் செய்யாமல் அங்கிருந்து தன் படைகளுடன் கிளம்புகிறார்.

மற்றொருமுறை, நீண்ட நாள்கள் கழித்து, வந்தியத்தேவனும், அருள்மொழிவர்மனும், ஆழ்வார்க்கடியான் நம்பியும் ஈழத்தீவில் நடந்து செல்கையில் மந்தாகினி தோன்றி எச்சரிக்கை செய்கிறாள். அவளுடைய எச்சரிக்கைப்படியே அவர்கள் சாலையோரம் நடந்த வந்தபோது, வீட்டின் சுவர் இடிந்துவிழுகிறது. அதிலிருந்து அனைவரும் தப்பிப் பிழைக்கின்றார்கள்.

பொன்னியின் செல்வர் ஈழத்து ராணி என்று அவர் அழைத்த மந்தாகினி தேவிக்காக தஞ்சையில் ஒரு கோயில் எடுப்பித்தார். அது சில காலம் சிங்கள நாச்சியார் கோவில் என்ற பெயருடன் பிரபலமாக விளங்கி வந்தது. இவ்வாறு சோழ இளவரசர் அருள்மொழிவர்மனின் உயிருக்கு வருகின்ற ஆபத்திலிருந்து எல்லாம் காக்கும் கடவுளாக மந்தாகினி வருகிறார்.

**சுந்தரச்சோழரின் காதலி**

மந்தாகினி கதை முழுவதிலும் சுந்தரச்சோழரின் காதலியாகவும், சுந்தரச்சோழரை காதலிப்பவளாகவும் வருக்கிறாள். ஒருமுறை, ஈழநாட்டுக்கு படையெடுத்துச் சென்ற சோழ வீரர்களுடன் சுந்தரச் சோழர் போரிடச் சென்றார். அப்பொழுது போரிலே தோல்வியுற நேர்ந்தது. தன் வீரர்கள் பலரையும் இழந்த சுந்தரச் சோழர், போரில் தோற்று ஓடி வந்த வீரர்களைத் தன்னுடன் சேர்த்து, கப்பலேறி சோழ நாட்டிற்குப் புறப்பட்டார். தோல்வியோடு திரும்பிச் செல்ல விரும்பாத சுந்தரச் சோழர் அங்கிருந்த வீரர்கள் அறியாதபடி மீண்டும் கடலில் குதித்து போதத்தீவில் கரை ஒதுங்கினார். ஒரு மரத்தின் கிளையில் அமர்ந்து கொண்டு நடந்தவைகளை எல்லாம் நினைத்து ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தார். அச்சமயத்தில் ஒரு பெண்ணின் கூக்குரல் கேட்டு தன் நினைவுகளில் இருந்து திரும்பி பார்த்தபொழுது அப் பெண்ணை ஒரு கரடி துரத்திக் கொண்டிருப்பதைக் கண்டார். தன் கையில் இருந்த வேலால் அந்தப் கரடியை குறி பார்த்து எய்தார். வேலால் தாக்கப்பட்ட கரடி திரும்பவும் வீரனை நோக்கி கோபத்தோடு ஓடி வந்தது. வீரனும், கரடியும் சண்டையிட்டுக்

கொண்டார்கள். வீரனே வெற்றி பெற்றான். இதனை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணானவள் ஓடிச் சென்று தன் தந்தையான கரையரை அவ்விடம் அழைத்து வந்தாள். கரையர் அந்த வாலிபனைக் கண்டு அவனிடம் நடந்த செய்திகளைக் கூறியபொழுது, தன்னை காப்பாற்றிய அந்த பெண்ணிடம் நன்றியை தெரிவித்தார். அந்தப் பெண் ஊமை என்பதையும் காது கேளாது என்பதையும் அறிந்து கொண்டது முதலே,

**கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**

**என்ன பயனும் இல குறள்** 1100

என்ற குறளுக்கேற்ப, அந்தப் பெண் மீது தீராத காதல் கொண்டார். செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் அம்மண்ணோடு கலந்து அதன் நிறத்தையும், சுவையையும் பெற்று தன் தன்மை மாறி ஒன்றுபடுவது போலத் தலைவன் தலைவி என்ற இருவர் உள்ளங்களும் காதலால் தம்முள் கலந்து ஒன்றாயின என்பதை,

**யாயும் யாயும் யார் ஆகியரோ**

**எந்தையும் நுந்தையும் எம்முறை கேளீர்**

**யானும் நீயும் எவ்வழி அரிதும்**

**செம்புலப் பெயல் நீர் போல**

**அன்புடை நெஞ்சம் தான்கலந்தனவே குறுந்.பா.**40.

என்ற இந்த சங்கப்பாடலில் கூறியிருப்பது போன்று சுந்தரச்சோழனும், மந்தாகினியும் தம்முள் தாம் கலந்து ஒன்றாகிய செய்தியை கூறுமிடத்து, இதயங்கள் இரண்டு ஒன்று சேர்ந்து விட்டால் மற்ற புலன்களைப் பற்றி என்ன கவலை. அந்த வாலிபனுக்கு அந்தத் தீவு சொர்க்க பூமியாகவே தோன்றியது. நாட்கள், மாதங்கள், வருஷங்கள் இவ்விதம் சென்றன. எத்தனை நாள் அல்லது எத்தனை வருஷம் ஆயிற்று என்பதைக் கணக்கு பார்க்கவே அவன் மறந்து விட்டான். பொன்.செல்.பக்.467 என்று சுந்தர சோழர் தன் இளவயதில் காதலைத் தனது மகள் குந்தவை தேவியிடம் கூறுகிறார்.

இப்படியாக பல மாதங்கள் ஓடின. ஒரு நாள் அந்த வாலிபனைத் தேடிக் ஒரு கப்பல் வந்தது. சோழநாடு தனக்காகக் காத்திருப்பதாக வந்தவர்கள் கூறியதைக் கேட்டு, நான் மீண்டும் வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன் என்று கூறி புறப்பட்டுச் சென்றார். வாலிபன் கப்பலில் ஏறிய போது அவள் சற்று தூரத்தில் அந்த பழைய வளைந்த தென்னை மரத்தின் மேல் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவருடைய இரு கண்களும் அப்பொழுது இரண்டு கண்ணீர் கடல்களாக வாலிபனுக்கு தோன்றின.

கப்பலின் வந்த வாலிபனைக் கண்ட மக்கள் மகிழ்ந்தனர். அவன் அழகை கண்டு வியந்தனர். அவனது இயற்பெயர் பராந்தகன் என்பதையே சுந்தரச் சோழர் என்று மாற்றிக் கூறும்படிக்கு அவன் அழகு வாய்ந்தவனாக இருந்தான். மக்கள் அவனை அரசனாக்கிடத் துடித்தனர். இந்த சூழலில் அரச பதவியும் தனது அழகு குறித்த மேலான எண்ணமும் அவருக்கு தோன்றியது. அப்பொழுது தனக்கு துணைவியாக ஊமையும் காது கேளாததுமான பெண்ணை எப்படி கொண்டு வந்து அரசியாக்குவது? அந்த நாளில் நான் மேனி அழகில் நிகரற்றவன் என்று வேண்டாத பிரபலம் ஒன்று எனக்கு ஏற்பட்டிருந்தது. அதை ஒரு புகழாகவே நான் நினைக்கவில்லை. ஆயினும் மற்றவர்கள் அதைப்பற்றி

ஓயாது பேசினார்கள். என் பாட்டனாரின் பெயராகிய பரந்தகன் என்னும் பெயரை எனக்கு வைத்திருந்தும், அது அடியோடு மறையும்படி செய்து சுந்தரச் சோழர் என்ற பெயரைப் பிரபலப்படுத்தி விட்டார்கள். நான் இளவரசு பட்டம் சூடிக்கொண்டது பற்றி இவ்வளவு ஆயிரம் ஆயிரம் மக்கள்… இவ்வளவு பேருடைய மகிழ்ச்சி முக்கியமானதா ஒரே ஒரு ஊமை பெண்ணின் வாழ்க்கை முக்கியமானதா பொன்.செல்.**பக்.**471 என்று தயக்கம் அவருக்கு ஏற்பட்டது. இருந்த பொழுதிலும் ஊமை ராணியின் நினைவாகவே இருந்தார். மந்தாகினியை அப்படியே உதறி விடவும் அவர் மனம் விரும்பவில்லை. சுந்தரச் சோழர் அரச பட்டம் தரித்தபொழுது, அவருக்கு அத்தனை ஜனக் கூட்டத்திலும் ஒரே ஒரு முகம் மட்டும் பிரம்மாண்டமாக தெரிய ஆரம்பித்தது அதுதான் அந்த ஊமை ராணி மந்தாகினியின் முகம். அப்பொழுது, அரண்மனை மேன்மாடத்தில் ராஜகுமாரன் தலையில் கிரடத்துடன் நின்றான். அவனை சூழ்ந்து ஆடை அலங்காரங்கள் புனைந்த பலர் நின்றார்கள். அதைப் பார்த்து அந்த இளம் பெண்ணின் மனம் கலங்கியது. அவள் ஒரே ஓட்டமாக ஓடினாள். பொன்.செல்.**பக்.597** சுந்தரச் சோழர் தன் நண்பனும் முதல் மந்திரியுமான அனிருத்தனை தனியாக அழைத்து தான் கண்ட காட்சியை கூறி அந்த ஊமைப் பெண்ண அழைத்துவரக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க முதல் மந்திரியும் அவளைத் தேடி ஆட்களை அனுப்பினார். வீரர்களும் தேடிச் சென்றனர். கோடிக்கரைக்கு போனவர்கள் அங்கே உள்ள கலங்கரை விளக்கக் காவலன் வீட்டில் ஒரு ஊமை பெண் இருப்பதாக கண்டுபிடித்தார்கள்.

இரண்டு நாள் சுந்தரச் சோழர் அந்த கலக்கத்திலேயே இருந்தார். ஆனால் ஆன மட்டும் அவளை மறந்து விட பார்த்தும் தூங்க முடியவில்லை. மீண்டும் அவளைத் தேடி முதன் மந்திரியை அழைத்துக்கொண்டு கோடிகரைக்க புறப்பட்டான்.

அந்த ஊமைப் பெண்ணை அங்கே கண்டுபிடித்தால் அப்புறம் அவளை என்ன செய்வது**?** என்று எண்ணிய போது மனம் குழம்பியது. தேடிச் சென்ற வீரர்கள் கலங்கரை விளக்கத்தின் மேல் நின்று ஒரு பெண் கடலுக்குள் தவறிக் குதிப்பதை பார்த்தாகவும், அவள் இறந்துவிட்டாள் என்றும் தெரிவிக்க, அவள் இறந்த செய்தியை அறிந்த பின் அவர் ஓரளவு நிம்மதி அடைந்தார்.

சில காலம் நிம்மதியாகச் சென்றது என்று நினைத்துக் கொண்டிருந்த சுந்தரச் சோழரை, நந்தினி தனது அன்னையின் ஆவி வடிவத்தைப் போல் நடித்து குழப்புகின்றார். ஆதித்த கரிகாலனுக்கு இளவரசு பட்டம் சூட்டிய தினம் அதே ஊமச்சியின் ஆவி அங்கே பெண்களின் மத்தியில் நின்று ஆதித்த கரிகாலனை கொடூரமாக உற்றுப் பார்த்த போது மீண்டும் அவளை சுந்தரச் சோழர் கண்டார். பழுவூர் இளையராணி நந்தினிதேவின் முகத்தோற்றம் மந்தாகினியின் முகதோற்றத்தினை ஒத்திருப்பதினைக் கண்டு சுந்தரச் சோழர் மந்தாகினியின் ஆவி என்று குழம்புகின்றார். அதனை, ஆனால் உயிரோடு இருப்பவர்களை காட்டிலும் செத்துப் போனவர்கள் அதிக கொடுமைக்காரர்கள் என்று தோன்றுகிறது பொன்.செல்.பக்.473 என்று கூறுகிறார். இதை, சக்கரவர்த்திக்கு எதிரில் சற்று தூரத்தில் ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது அது பெண்ணின் உருவம் பாதி உருவம் தான் தெரிந்தது சூழ்நிலையிலும் அகில் புகையிலும் மறைந்திருந்தது தெரிந்தவரையில் அந்த உருவம் இளையராணியை **போல** அல்லவா இருக்கிறது இது என்ன கனவா சித்த பிரம்மையா இல்லை உண்மையைதான்… சக்கரவர்த்தி அப்படி எல்லாம் பேசுகிறார் உன்னை கொன்றது உண்மைதான் என்று அதன் பொருள் என்ன.

பொன்.செல்.பக்.458 என்ற வானதியின் கூற்றினாலும், தங்கள் அன்னையின் ஆவி வடிவத்தைப் போல் நடித்து சக்கரவர்த்தியை துன்புறுத்துவதற்காக போகிறீர்கள் என்று தெரிந்து கொண்டேன் பொன்.செல்.**பக்.**1557 என்ற வந்தியத்தேவன் கூற்றினாலும் அறிகிறோம். முதல் மந்திரி சுந்தரச் சோழரிடம் மந்தாகினி உயிரோடு இருப்பதை நிரூபிக்க அழைத்து வருகிறார்…

இறுதியாக சுந்தரச்சோழரை பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் வேலெறிந்து கொல்ல முயன்ற பொழுது அந்த வேலை தன் மேல் ஏற்று சுந்தரச்சோழரின் மடியிலேயே மந்தாகினி உயிர் துறந்தாள். அப்பொழுது சுந்தரச் சோழர் உன்னிடம் எனக்குள்ள அன்பை இனி எப்படி காட்டுவேன் அதற்கு வழியில்லாமல் செய்து விட்டாயே! பொன்.செல்.**பக்**. 1505 என்று அழுகின்றபொழுது சுந்தரச்சோழரின் காதலை அறியமுடிகிறது. இங்ஙனம் மந்தாகினி கதை முழுவதிலும் சுந்தரச்சோழரின் காதலியாகவும், சுந்தரச்சோழரை காதலிப்பவளாகவும், சுந்தரச் சோழருக்கு வரும் ஆபத்திலிருந்து எல்லாம் காக்கும் கடவுளாகவும் மந்தாகினி இருக்கிறாள்.

**வீரபாண்டியனின் பிள்ளைகளுக்குத்தாய்**

வீரபாண்டியனின் பிள்ளைகளுக்குத் தாயாக மந்தாகினியை அறியமுடிகிறது. கருத்திருமன் மந்தாகினியைப் படகில் ஏற்றி அழைத்துச் சென்ற பொழுது கடல் நடுவில் கட்டை ஒன்றைப் பிடித்துக் கொண்டு ஒருவன் மிதப்பதை கண்டு, அவனையும்(வீரபாண்டியன்) படகில் ஏற்றிக் கொண்டு போய் அவன் பூதத்தீவில் இறக்கி விட்டான். இலங்கை மன்னனுடைய பேச்சிலிருந்து தன்னால் காப்பாற்றப்பட்டவர் பாண்டிய நாட்டு அரசர் என்பதை தெரிந்து கொண்டான் அத்.58. கருத்திருமன் கதை. பொன்.செல்.**பக்**. 1704. முதலில் அந்த பெண் புதிய மனிதனை கண்டு மிரண்டாள். பிறகு அவனைக் கவனியாமல் இருந்தாள். அந்தத் தீவில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் இந்த பெண்ணைத் தமது மகள் என்று கூறினார். முன்னமே அவள் ஊமை என்றும், இப்பொழுது தம்மைக்கூட அவள் அறிந்து கொள்ளவில்லை என்றும் கூறினார். பிறகு பாண்டிய அரசர் கருதிருமனிடம் அந்த ஊமைப் பெண்ணை பத்திரமாக பராமரிக்க ஏற்பாடு செய்தார். மந்தாகினி புத்தி சுவாதீனம் இன்றி இருந்த பொழுது அவள் தான் கருவுற்றிருந்த செய்தி அறியாமலே அவள் சுற்றித்திரிந்தாள்.

மறுபடியும் ஒரு தடவை கால் தவறி கடலில் விழுந்து காப்பாற்றப்பட்ட பிறகு அவர்களை எல்லாம் அவளுக்கு நினைவு வந்தது அவள் கர்ப்பவதியாய் இருக்கிறாள் என்பதை மற்றவர்கள் தெரிந்து கொண்டார்கள். அதை அவளும் உணர்ந்து பெரும் பீதியில் ஆழ்ந்தாள். பொன்.செல்.பக்.1705. குழந்தை பிறக்கும் காலம் வந்த பொழுது அவளையும் அவளது தங்கையான வாணி அம்மையையும் தன் வீட்டில் சேர்த்துக்கொண்டு செம்பியன் மாதேவி இருந்தார். இந்த சூழலில் அரண்மனையிலேயே மந்தாகினிக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தார்கள். அந்த ஊமை பெண்ணை அழைத்துக் கொண்டு வருவதற்கு மறுபடியும் ஒரு முயற்சி செய்யும்படி வீரபாண்டியன் கருத்திருமனிடம் தெரிவித்தார். இதனால் வீரபாண்டியனின் பிள்ளைகளுக்குத் தாயாகவும் மந்தாகினியை அறியமுடிகிறது.

**மதுராந்தகனின் தந்தை**

மதுராந்தகனுடைய தந்தை யார் என்பதை வெளிப்படையாக நாவலாசிரியர் குறிப்பிடவில்லை என்றாலும் குறிப்பாக சில இடங்களில் உணர்த்திச் சென்றுள்ளதை காண முடிகின்றது. மந்தாகினிக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தார்கள். நந்தினி, மதுராந்தகனின் முகத்தோற்றம் மந்தாகினியின் முகதோற்றத்தினை ஒத்திருப்பதினைக் கொண்டு அந்த இரட்டை குழந்தைகள் நந்தினி, மதுராந்தகன் என்று அறியமுடிகிறது.

நந்தினி, ஆதித்த கரிகாலனை மிக நெருங்கி அவர் காதிலே மிக மெல்லிய நடுங்கிய குரலில் என்னைப் பெற்ற தந்தை...தான் என்று கூறியது போன்று, நான் தங்கள் தந்தையின் ஊழியன் என்று கருந்திருமன் கூறியதும் மதுராந்தகன் முகம் தெளிவு பெற்றது கருந்திருமன் சற்று அருகில் நகர்ந்து வந்து ஐயா தங்கள் தந்தை... என்று மெல்லிய குரலில் கூறினான். மதுராந்தகம் காதில் அவன் கூறியது விழுந்தது. மதுராந்தகனுடைய தலை சுற்றியது. நீ கூறியது உண்மைதானா? உண்மையாகவே நான் இராஜகுமாரன் தானா? என்று கேட்டான் பொன்.செல்.பக்.1725 என்று கூறும் பொழுதும், ஆழ்வார்கடியான் கருந்திருமனுடைய நெஞ்சை ஒரு அமுக்கு அமுக்கி உண்மையைச் சொல் மதுராந்தகன் யாருடைய மகன் என்று கேட்டான் ஊமை மந்தாகினியின் மகன்.... மதுராந்தகனின் தகப்பன் யார் உண்மையைச் சொல் கருந்திருமன் இதற்குப் பதில் மிக மெல்லிய குரலில் சொன்னான் பக்.1739 கூறும் பொழுதும் வீரபாண்டியன் மதுராந்தகனின் தந்தையாக அறியமுடிகிறது.

**பொன்னியின் செல்வன் கதையில் - யார் இந்த மந்தாகினி?**

மந்தாகினியை குறித்து கூறும் பொழுது, மண்ணானது ஒரு விதையாகி, வேராகி, தளிராகி, கிளை பரப்பி, இலைகள் நிறைத்து, பூவாகி, காயாகி, கனிந்து, விதையாகி, மண்ணாகும் விந்தையைப் படைத்து காட்டி இருக்கின்றார் கல்கி அவர்கள். இந்த மந்தாகினி யார்? யார் இந்த மந்தாகினி? என்று தேடத்தேட மந்தாகியின் ஒரு உருவம், அந்த ஒரே உருவம் அது எத்தனை எத்தனை வடிவங்களை எடுக்கின்றது என்பதை நாம் பார்க்கின்றோம். நந்தினியாக, சுந்தரச் சோழரின் காதலியாக, ஊமைப் பெண்ணாக, பொன்னியின் செல்வனைக் காக்கின்ற குலதெய்வமாக, ஊமச்சி ஆவியாக, ஊமை ராணியாக, ஈழத்து ராணியாக, ஈழத்து அரசியாக, சோழர் குலதெய்வமாக, மதுராந்தகனாக வாணியம்மையாக தெய்வங்கள் அவதாரங்கள் எடுப்பது போல மந்தாகினி எடுத்த வாமன வடிவமே விஸ்வரூப தரிசனமே இவையெல்லாம். கல்கி அவர்கள் இதைப் பொன்னியின் செல்வனிலும் காட்டுகின்றார்.

அதாவது சுந்தரச் சோழர் மந்தாகினியை குறித்து குறிப்பிடும் பொழுது ஒரு முகம், ஒரு பெண்ணின் முகம், சோகம் ததும்பிய முகம், கண்ணீர் நிறைந்த கண்களினால் என்னை பரிதாபமாக பார்த்துக் கொண்டிருந்த முகம் தெரிந்தது. அத்தனைக் கூட்டத்துக்கு நடுவில் எப்படி அந்த ஒரு முகம் என் கண்ணையும், கருத்தையும் கவர்ந்தது என்பதை நான் அறிவேன். பிறகு அங்கிருந்து என் கண்களும் நகரவில்லை; கவனமும் பெயரவில்லை. அந்த முகம் வர வர பெரிதாகி வந்தது; என் அருகே வருவது போலிருந்தது. கடைசியில், அந்த பெரிய ஜனத்திரர் முழுவதும் மறைந்து, என் அருகில்

நின்றவர் எல்லாரும் மறைந்து, ஆசார வாசல் மறைந்து, தஞ்சை நகரில் கோட்டை கொத்தளம் மறைந்து, வானும் மண்ணும் மறைந்து, அந்த ஒரு முகம் மட்டும் தேவி பரமேஸ்வரியின் விஸ்வரூப விஸ்வரூபத்தை போல் என் கண் முன்னால் தோன்றியது. என் தலை சுழன்றது; கால்கள் பலம் இழந்தன; நினைவு தவறியது... பொன்.செல்.**பக்**.470 என்று கூறும் பொழுது இதை அறியமுடிகிறது.

.